ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 6.3 – நல்குரவும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 6.3 – நல்குரவும்

‡ நல்குரவும் செல்வும் ⋆
நரகும் சுவர்க்கமும் ஆய் ⋆
வெல் பகையும் நட்பும் ⋆
விடமும் அமுதமும் ஆய் ⋆
பல்வகையும் பரந்த ⋆
பெருமான் என்னை ஆள்வானை ⋆
செல்வம் மல்கு குடி ⋆
திருவிண்ணகர் கண்டேனே ॥ **6.3.1** ॥

கண்ட இன்பம் துன்பம் ⋆
கலக்கங்களும் தேற்றமும் ஆய் ⋆
தண்டமும் தண்மையும் ⋆
தழலும் நிழலும் ஆய் ⋆
கண்டு கோடற்கரிய ⋆
பெருமான் என்னை ஆள்வான் ஊர் ⋆
தென் திரைப் புனல் சூழ் ⋆
திருவிண்ணகர் நன்னகரே ॥ **6.3.2** ॥

நகரமும் நாடுகளும் ⋆
ஞானமும் மூடமும் ஆய் ⋆
நிகரில் சூழ் சுடராய் இருளாய் ⋆
நிலனாய் விசும்பாய் ⋆
சிகர மாடங்கள் சூழ் ⋆

திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆
புகர் கொள் கீர்த்தி அல்லால் இல்லை ⋆
யாவர்க்கும் புண்ணியமே ॥ **6.3.3** ॥

புண்ணியம் பாவம் ⋆
புணர்ச்சி பிரிவென்றிவை ஆய் ⋆
எண்ணம் ஆய் மறப்பாய் ⋆
உண்மை ஆய் இன்மை ஆய் அல்லனாய் ⋆
திண்ண மாடங்கள் சூழ் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆
கண்ணன் இன் அருளே ⋆
கண்டு கொண்மின்கள் கை தவமே ॥ **6.3.4** ॥

கை தவம் செம்மை ⋆
கருமை வெளுமையும் ஆய் ⋆
மெய் பொய் இளமை முதுமை ⋆
புதுமை பழமையும் ஆய் ⋆
செய்த திண் மதிள் சூழ் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆
பெய்த காவு கண்டீர் ⋆
பெரும் தேவுடை மூவுலகே ॥ **6.3.5** ॥

மூவுலகங்களும் ஆய் அல்லன் ஆய் ⋆
உகப்பாய் முனிவாய் ⋆
பூவில் வாழ் மகள் ஆய் ⋆
தவ்வை ஆய்ப் புகழ் ஆய் பழி ஆய் ⋆
தேவர் மேவித்தொழும் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆

பாவியேன் மனத்தே ⋆
உறைகின்ற பரம் சுடரே ‖ **6.3.6** ‖

பரம் சுடர் உடம்பாய் ⋆
அழுக்கு பதித்த உடம்பாய் ⋆
கரந்தும் தோன்றியும் நின்றும் ⋆
கை தவங்கள் செய்யும் ⋆
விண்ணோர் சிரங்களால் வணங்கும் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆
வரம் கொள் பாதம் அல்லால் இல்லை ⋆
யாவர்க்கும் வன் சரணே ‖ **6.3.7** ‖

வன் சரண் சுரர்க்காய் ⋆
அசுரர்க்கு வெம் கூற்றமும் ஆய் ⋆
தன் சரண் நிழற்கீழ் ⋆
உலகம் வைத்தும் வையாதும் ⋆
தென் சரண் திசைக்குத் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆
என் சரண் என் கண்ணன் ⋆
என்னை ஆளுடை என் அப்பனே ‖ **6.3.8** ‖

‡ என் அப்பன் எனக்காய் இகுள் ஆய் ⋆
என்னைப் பெற்றவள் ஆய் ⋆
பொன் அப்பன் மணி அப்பன் ⋆
முத்தப்பன் என் அப்பனும் ஆய் ⋆
மின்னப் பொன் மதிள் சூழ் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த அப்பன் ⋆

தன் ஒப்பார் இல் அப்பன் ⋆
தந்தனன் தன தாள் நிழலே ‖ **6.3.9** ‖

நிழல் வெய்யில் சிறுமை பெருமை ⋆
குறுமை நெடுமையும் ஆய் ⋆
சுழல்வன நிற்பன ⋆
மற்றும் ஆய் அவை அல்லனும் ஆய் ⋆
மழலை வாய் வண்டு வாழ் ⋆
திருவிண்ணகர் மன்னு பிரான் ⋆
கழல்கள் அன்றி ⋆
மற்றோர் களைகண் இலம் காண்மின்களே ‖ **6.3.10** ‖

‡ காண்மின்கள் உலகீர் ! என்று ⋆
கண் முகப்பே நிமிர்ந்த ⋆
தாள் இணையன் தன்னைக் ⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
ஆணை ஆயிரத்துத் ⋆
திருவிண்ணகர்ப் பத்தும் வல்லார் ⋆
கோணை இன்றி விண்ணோர்க்கு ⋆
என்றும் ஆவர் குரவர்களே ‖ **6.3.11** ‖

அடிவரவு — நல்குரவும் கண்ட நகரமும் புண்ணியம் கைதவம் மூவுலகும் பரஞ்சுடர் வன்சரண் என்னப்பன் நிழல் காண்மின் குரவை

நல்குரவும் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்